<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 598 /2025</u>
<u>வழக்கு சாட்சி PW-6</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலுமகேந்திரன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | அச்சன்புதூர் | வயது | : | 30 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 11.06.2026.

**(1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி காணொளி மூலம் சிறையில் இருந்து ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :-</u>**

நான் அச்சன்புதூரில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். சுமார் 6 வருடத்திற்கு முன்பு நான் அச்சன்புதூர் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தேன். அங்கு வைத்து நான் அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 23.11.2020ம் தேதி மாலை 20.00 மணியளவில் காவல் நிலையம் முன்பு வைத்து வழக்கின் எதிரி சங்கு என்பவரை கைது செய்து என் முன்பாகவும், சாட்சி வெளியப்பராஜா முன்பும் விசாரித்தார்கள் என்றும், அப்போது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை கொடுத்தார் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து போட்டோம் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:34:16 +0530